# ஆற்றல்

Aகரம் haram

## மாதிரிப் பரீட்சை - 2021

## தொடர் - 1

## தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

## வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

**சுட்டெண்** :...................................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |


| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**


01ஆம் 02ஆம் வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள படங்களுடன் பொருந்துகின்ற படத்தைத் தெரிவு செய்க.

01.






(1)




(2)



(3)

02.





(1)




(2)




(3)

பின்வரும் உருக்களில் இரண்டு ஒத்த தன்மையுடையவை. அவற்றைக் குறிக்கும் சரியான விடையின் கீழே கோடிடுக.


03.




A



B




C




D

(1) A உம் B உம் (2) B உம் C உம் (3) A உம் C உம்


04.




A



B



C



D

(1) B உம் C உம் (2) B உம் D உம் (3) A உம் B உம்

சுட்டெண் :.................................................

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஆறு சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு சொற்கள் ஏனையவற்றிலிருந்து வேறுபடுகின்றன. அவற்றின் கீழே கோடிடுக.

05. ஆடு , மாடு , கோழி , குதிரை , குயில் , நாய்

(1) ஆடு, கோழி (2) குதிரை, நாய் (3) கோழி , குயில்

06. கை , கால் , கழுத்து , மாலை , விரல் , மோதிரம்

(1) கை, கழுத்து (2) கால் , மோதிரம் (3) மாலை, மோதிரம்

தரப்பட்டுள்ள வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

07. பறவை குஞ்சுகளுக்கு உணவூட்டியது.

அம்மா பிள்ளைக்குத் தலைசீவினார்.

பறவை - அம்மா எனின்,

உணவூட்டியது - ..................................

(1) குஞ்சுகளுக்கு (2) தலைசீவினார் (3) பிள்ளைக்கு

முதலில் தரப்பட்டுள்ள இருசொற்களுக்கும் இடையிலுள்ள தொடர்பை அவதானித்து அடுத்துவரும் சொல்லுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

08. தென்னை - குரும்பை எனின், பனை - .........................................

(1) வடலி (2) மரம் (3) நுங்கு

09. பாடசாலை - அதிபர் எனின், வங்கி - .........................................

(1) முகாமையாளர் (2) பணம் (3) எழுதுநர்

பின்வரும் வினாக்களுக்கு வெற்றிடத்தில் வரவேண்டிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

10. A B C என்பது Z Y X ஆயின் D E F என்பது:- ............................................................

(1) U V W (2) X Y Z (3) W V U

11. B C D என்பது A B C ஆயின் C D E என்பது:- ............................................................

(1) C D E (2) B C D (3) C D B

சரியான ஒழுங்கில் அமைந்த விடையின் கீழ்க் கோடிடுக.

12. (1) தோடம்பழம் → தேங்காய் → பயறு → நெல்லிக்காய் → பலாப்பழம்

(2) பயறு → நெல்லிக்காய் → தோடம்பழம் → தேங்காய் → பலாப்பழம்

(3) பயறு → தோடம்பழம் → தேங்காய் → நெல்லிக்காய் → பலாப்பழம்

13. (1) கிராமம் → நகரம் → மாவட்டம் → மாகாணம் → நாடு

(2) மாவட்டம் → கிராமம் → நாடு → நகரம் → மாகாணம்

(3) கிராமம் → மாவட்டம் → மாகாணம் → நகரம் → நாடு

தோட்டம் ஒன்றில் உள்ள பழமரங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

மா ⟹ பப்பாசி

பப்பாசி ⟸ பலா

மா ⟹ பலா

| |
|---|
| குறைய ⟹ கூட |
| கூட ⟸ குறைய |

14. இங்கு அதிகமாக உள்ள மர வகை எது?

(1) மா (2) பலா (3) பப்பாசி

15. இங்கு குறைவாக உள்ள மர வகை எது?

(1) மா (2) பலா (3) பப்பாசி

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தின் கீழ்க் கோடிக.

16. (1) புத்தக விழாவில் நாங்கள் பல அறிய நூல்களைப் பார்த்தோம்.

(2) புத்தக விளாவில் நாங்கள் பல அரிய நூல்களைப் பார்த்தோம்.


(3) புத்தக விழாவில் நாங்கள் பல அரிய நூல்களைப் பார்த்தோம்.

17. (1) எமது பாடசாலையில் சித்திறக் கண்காட்சி நடைபெற்ரது.

(2) எமது பாடசாலையில் சித்திரக் கன்காட்சி நடைபெற்றது.

(3) எமது பாடசாலையில் சித்திரக் கண்காட்சி நடைபெற்றது.

A B C D E என்னும் ஐந்து பற்சக்கரங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று ஒன்றுடன் ஒன்று முட்டியிருக்குமாறு பொருத்தப்பட்டுள்ளன. சக்கரம் A ஆனது அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ளது போன்று வலஞ்சுழியாகச் சுற்றுகின்றது எனின்,




18. வலஞ்சுழியாகச் சுற்றும் சக்கரங்கள் எவை?


(1) A C E (2) A C D (3) A B D


19. இடஞ்சுழியாகச் சுற்றும் சக்கரங்கள் எவை?

(1) B E (2) B C (3) B D


தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

20.






(1)





(2)




(3)


21.








(1)



(2)



(3)


22. பின்வருவனவற்றுள் இரு பக்கங்களும் சமனாக உள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) A 3 5 3 N 4 2 D = A 3 5 3 N 4 2 D
(2) A 3 5 3 B 4 2 D = A 3 5 3 A 4 2 D
(3) A 3 5 3 N 4 2 4 = A 3 5 3 N 4 1 D

23. பின்வருவனவற்றுள் இரு பக்கங்களும் சமனாக அமையாத விடையைத் தெரிவு செய்க.

(1) 5 6 f 5 M g d W = 5 6 f 5 M g d W
(2) A 1 9 6 1 5 4 0 = A 1 9 6 1 5 4 0
(3) B 3 5 3 N 4 2 4 = B 3 5 3 N 4 1 D

24. கீழே தரப்பட்டுள்ள உருவில் அவதானிக்கக்கூடிய நாற்பக்கல்களின் எண்ணிக்கை யாது?



(1) 9 (2) 10 (3) 11

கீழ்வரும் வினாக்களுக்கு A , B ஆகிய இடங்களில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

25.

| பழவகை | காய்கறி வகை | A |
|---|---|---|
| மாம்பழம்<br>பலாப்பழம் | கத்தரி<br>B | நெல்<br>பயறு |

(1) தானிய வகை, பயற்றை (2) பயற்றை, வெண்டி (3) தானியவகை, பயறு


26.

| A | ஆகாயம் | கடல் |
|---|---|---|
| மான்<br>பேருந்து | பருந்து<br>விமானம் | சுறா<br>B |

(1) தரை , திருக்கை (2) தரை , கப்பல் (3) கரடி , கப்பல்


கீழே தரப்பட்டுள்ள கோலங்களை இனங்கண்டு ? இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

27.





(1) 10 (2) 12 (3) 14

28.




(1) 36 (2) 34 (3) 30

மல்லிகை, றோசா, செவ்வந்தி ஆகிய மலர் வகைகளை விரும்பும் பிள்ளைகள் பற்றிய விபரம் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.




29. செவ்வந்தியை மட்டும் விரும்புபவர் யார்?

(1) கரன் (2) ரகு (3) பாலன்

30. மல்லிகை, றோசா ஆகிய இரு பூக்களையும் மட்டும் விரும்புபவர் யார்?

(1) சிவா (2) கரன் (3) மதி

31. கிடையாக வைக்கப்பட்டிருக்கும் கடிகாரம் 9 மணியைக்காட்டுகின்றது. அதன் நிமிடமுள் மேற்குத் திசையைக் காட்டினால் மணிமுள் எத்திசையை நோக்கி இருக்கும்?

(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு

32. இரு நண்பர்கள் ஓரிடத்திலிருந்து எதிரெதிர்த்திசைகளில் 200m தூரம் சென்று ஒருவர் வலது பக்கமாகவும் மற்றவர் இடது பக்கமாகவும் திரும்பி 100m வீதம் சென்றனர். தற்போது இருவருக்கும் இடையிலுள்ள தூரம் என்ன?

(1) 200m (2) 300m (3) 400m

33. ஒரு குழுவிலுள்ள ஐந்துபேர் தமக்கிடையே கைகுலுக்கிக்கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட கைகுலுக்கல்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 20 (2) 10 (3) 25

34. இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின்போது மைதானத்தைச் சுற்றி சிவப்பு, பச்சை, மஞ்சள் என்ற ஒழுங்கில் நிறக்கொடிகள் நாட்டப்பட்டுள்ளன. அந்த வரிசையில் 32 ஆவதாக உள்ள கொடியின் நிறம் என்ன?

(1) சிவப்பு (2) பச்சை (3) மஞ்சள்

35. வாகனத்தரிப்பிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள்களும் ஆட்டோக்களுமாக மொத்தம் 37 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 92 எனின் அங்கிருந்த மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாது?


(1) 17 (2) 18 (3) 19

36. ஒரு சதுரவடிவக் காணியின் மூன்று பக்கங்களுக்கு கம்பிவேலி அமைப்பதற்காக கம்பித்தூண்கள் நடப்பட்டன. ஒரு பக்கத்தில் உள்ள தூண்களின் எண்ணிக்கை 9 எனின் காணியின் மூன்று பக்கங்களிலும் நடப்பட்ட தூண்களின் எண்ணிக்கை யாது?

(1) 24 (2) 27 (3) 25

37. விரித்து வைக்கப்பட்டுள்ள புத்தகம் ஒன்றின் வலது பக்க எண் 35 எனின் அதற்கு அடுத்த பக்கத்தைப் புரட்டும்போது இடது பக்கத்தில் உள்ள எண் யாது?

(1) 36 (2) 37 (3) 38



நான்முகியொன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று அதன் உச்சியில் இருந்து நான்முகி வடிவான சிறிய பகுதி வெட்டி அகற்றப்பட்டது. இவ்வாறு வெட்டி அகற்றப்பட்டால் எஞ்சிய பகுதியில் உள்ள

38. உச்சிகளின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

39. முகங்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

40. இரு பாத்திரங்களில் உள்ள நீரின் மொத்த அளவு 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் ஆகும். பெரிய பாத்திரத்தில் சிறிய பாத்திரத்தை விட 400 மில்லிலீற்றர் அதிகமாக உள்ளது. எனவே பெரிய பாத்திரத்தில் உள்ள நீரின் அளவு யாது?

(1) 750 மில்லிலீற்றர்

(2) 1 லீற்றர் 100 மில்லிலீற்றர்

(3) 950 மில்லிலீற்றர்

# ஆற்றல்

Aharam அகரம்

## மாதிரிப் பரீட்சை - 2021

## தொடர் - 1

## தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கு வதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

## வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

**சுட்டெண்** :...............................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் உள்ள **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே** தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கூறப்பட்ட ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- சரியான விடை எழுதப்படவேண்டிய ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

**01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

டெங்கு நுளம்பார் தான் செய்தது குற்றம் என்று அறிந்திருக்கவில்லை. இருப்பினும், அவர் செய்தது கொலை முயற்சிக் குற்றம். அதற்காக, அவரைத் தமது இனசனத்தோடு இந்த நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளை இடுகிறேன். இதற்கு இரண்டு நாட்கள் அவகாசம் கொடுக்கிறேன். வெளியேறாது விட்டால், பலவந்தமாக அவர்களை வெளியேற்ற வேண்டிவரும். அதன்போது அவர்களில் பலர் இறக்கவும் நேரிடும். ஆகவே, விரைவாக அவர்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்த நீதிமன்றம் சுகாதாரப் பிரிவிற்கும் பொலிசாருக்கும் உத்தரவிடுகிறது.

(1) டெங்கு நுளம்பாரை நாட்டைவிட்டு வெளியேற்றும் பொறுப்பு யாருக்கு வழங்கப்பட்டது?

.............................................................................................................................

(2) நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் யாது?

.............................................................................................................................

(3) ஆணை என்னும் கருத்தைத் தரும் சொல் எது?

.............................................................................................................................

(4) விரைவாக என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.............................................................................................................................

(5) காலப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

.............................................................................................................................

(6) விசிறியும் சுழியும் இடம்பெறும் சொல்லை எழுதுக.

.............................................................................................................................

**02. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களுள் சரியான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.**

(1) பழுதடைந்த உணவுகளை உண்பதால் வயிற்று ...................... ஏற்படும்.
( வழி , வலி , வளி )

(2) பட்டத்தின் ................................ அறுந்து விழுந்தது.
( வாழ் , வால் , வாள் )

**03. பின்வரும் வாக்கியங்களைப் பன்மையில் எழுதுக.**

(1) பட்டம் வானில் ஆடியாடிப் பறந்தது.

.............................................................................................................................

(2) நீ சித்திரப் போட்டிக்குப் போவாயா?

.............................................................................................................................

சுட்டெண் :..............................................

**04. பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களை எழுதுக.**

(1) அணில் - ....................................  (2) எருமை - ....................................

**05. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புள்ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(1) தம்பி இனிமையாகப் ............................................................

( பாடுவார் , பாடுவான் , பாடும் )

(2) கூடையிலிருந்த ஒவ்வொரு ......................... வாசனையுடையது.

( பூவும் , பூக்களும் , பூவையும் )

**06. பின்வரும் சொற்களைச் சரியான வடிவத்தில் எழுதுக.**

(1) நாகரீகம் - ........................................  (2) ஆத்தங்கரை - ..........................................

(3) தண்ணி - ..............................................  (4) வெய்யில் - ..............................................

**07. கீழே தரப்பட்ட எதிர்கால வாக்கியங்களை இறந்தகால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

(1) நான் அழகிய காட்சிகளை வரைவேன்.

..................................................................................................................................

(2) நான் நூலகத்திற்குச் செல்வேன்.

..................................................................................................................................

**08. பின்வரும் கருத்தைத் தரும் தனிச் சொல்லை எழுதுக.**

(1) பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி ..................................................

(2) பத்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா ..................................................

**09. கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான எழுத்துக்களை எழுதி வாக்கியங்களை நிறைவு செய்க.**

(1) பெரியவர்களின் ம..........தைப் பு..........படுத்தாமல் பேசுதல் வே..........டும்

(2) வைத்தியசாலையில் ..........யாளிகள் பருக வெ.......... ..........ர் கொடுக்கப்பட்டது.

10. கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

(1) பாற்சோறு .................................... (2) கொஹா ........................................

11. **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தழிழ்ச் சொற்களை எழுதுக.**

(1) அங்(G)கிலி .................................... (2) மம நான்னத? ........................................

12. **பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.**

(1) beans .................................... (2) Books ........................................

13. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(1) வகுப்பறை .................................... (2) நூலகம் ........................................

14. **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

(01) எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக.

இருபதாயிரத்து எண்ணூற்றைம்பது :- ........................................................................

(02) பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

8054 :- ........................................................................

(03) கீழே தரப்பட்டுள்ள எண்களில் மிகச் சிறிய எண்ணைத் தெரிவு செய்து எழுதுக.

8749 , 8690 , 8795 , 8399 ........................................................................


(04) தரப்பட்டுள்ள உரோமன் எண்ணுக்கு அடுத்துவரும் உரோமன் எண்ணை எழுதுக.

VII :- ........................................................

(05) பின்வரும் தசம எண்களைப் பின்னத்தில் எழுதுக.

(1) 0.1 = .................................. (2) 0.3 = ..................................

(06) கீழே தரப்பட்டுள்ள உருவின் அரைப்பங்கை நிறந்தீட்டுக.



(07) ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் தை மாதம் 6852 ஆடைகளும் மாசி மாதம் 5325 ஆடைகளும் பங்குனி மாதம் 7860 ஆடைகளும் தயாரிக்கப்பட்டன. மூன்று மாதங்களிலும் தயாரிக்கப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.................................................................................................................................

(08) ஒரு குவியலில் உள்ள 848 செங்கற்களை நான்கு சமனான குவியல்களாகப் பிரித்தால் ஒரு குவியலில் இருக்கும் செங்கற்களின் எண்ணிக்கை யாது?

.................................................................................................................................

(09) பாத்திரமொன்றில் 7$\ell$ 350m$\ell$ நீரும் இன்னொரு பாத்திரத்தில் 5$\ell$ 250m$\ell$ நீரும் உள்ளது. இரண்டினதும் மொத்த அளவு யாது?

.................................................................................................................................


(10) தந்தையார் சந்தையிலிருந்து 6kg 750g அரிசியும் 1kg 350g சீனியும் வாங்கிவந்தார். அவர் வாங்கிவந்த அரிசியினதும் சீனியினதும் மொத்த நிறை யாது?

.................................................................................................................................

(11) அம்மா 75cm நீளமான சிவப்பு நிற நாடாவும் 65cm நீளமான பச்சை நிற நாடாவும் வாங்கினார். அவர் வாங்கிய நாடாவின் மொத்த நீளம் யாது?

.................................................................................................................................

(12) வியாபாரி ஒருவர் ஐந்து நாட்களில் விற்பனை செய்த தேங்காய்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.




(i) புதன்கிழமை விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை 70 ஆகும். இதனை வரைபில் நிழற்றிக் காட்டுக.

(ii) செவ்வாய்க்கிழமையை விடவும் வெள்ளிக்கிழமை எத்தனை தேங்காய்கள் கூடுதலாக விற்கப்பட்டுள்ளன?


.................................................................................................................................

(13) 245 228 194 444 260

கூட்டுக்குள் தரப்பட்டுள்ள எண்களுள் 6 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண்கள் எவை?

.......................................................................................................

(14) கீழே தரப்பட்டுள்ள வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மங்கள் இரண்டும் எவை?



..................................................

..................................................

(15) மூன்று தோடம்பழங்கள் வாங்குவதற்குச் செலவாகும் பணம் ரூ. 100.00 எனின் 15 தோடம்பழங்கள் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?

.......................................................................................................................................

**15. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. தியானப் பயிற்சியின் ஐந்தாம் படிமுறையாக அமைவது.
    (1) மனதைத் தளத்துதல் (2) திடசித்தம் (3) உதிப்பு

02. நீரில் வாழும் மிகப்பெரிய முலையூட்டி எது?
    (1) சுறா (2) திருக்கை (3) நீலத் திமிங்கிலம்

03. இருட்டான இடங்களில் நடமாடும் பூச்சி எது?
    (1) கரப்பான் (2) ஈசல் (3) வண்ணத்துப்பூச்சி

04. வெப்பகாலங்களில் நீர் நிலைகளில் படுத்திருக்கும் பிராணி எது?
    (1) எருமை (2) ஒட்டகம் (3) குதிரை

05. பின்வருவனவற்றுள் நுளம்புகளால் பரப்பப்படும் நோய்கள் மட்டும் கொண்ட விடை எது?
    (1) பிளேக், கொலரா, மலேரியா (2) டெங்கு, யானைக்கால், மலேரியா
    (3) மாலைக்கண், என்புருக்கி, டெங்கு

06. தாவர வித்துக்களைத் தூர இடங்களுக்கு எடுத்துச்சென்று வித்துப் பரம்பலுக்கு உதவும் பிராணி.
    (1) கொக்கு (2) வௌவால் (3) புறா



07. விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
    (1) என்புருக்கி (2) கண்டமாலை (3) மாலைக்கண்

08. 

படத்தில் காட்டப்பட்டுள்ளவர்
    (1) மொனராவில கப்பொட்டிப்பொல திசாவை
    (2) கொங்காலே கொட பண்டா
    (3) வண.எஸ்.மஹிந்த

09. இலங்கையின் தேசியக்கொடியில் உள்ள பச்சை நிறக்கீலம் குறித்து நிற்பது.
    (1) தமிழர் (2) சிங்களவர் (3) முஸ்லிம்கள்

10. சுவரில் ஆணியை அறைவதற்கும் கழற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் சாதனம்

(1)  (2)  (3) 

11. ''தன்னிறைவான ஒரு நாட்டில், சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்.'' என்னும் ஒட்டுமொத்தக் கருத்தையும் எடுத்துக் காட்டுவது எது?

(1) தேசியக் கொடி (2) தேசிய இலச்சினை (3) தேசியகீதம்

12. 

உருவில் காட்டப்பட்டுள்ள தாவரம் எது?


(1) நாகதாளி (2) முசுட்டை (3) பிரண்டை

13. சமைக்காது பச்சையாக உணவுடன் சேர்த்துக்கொள்ளக்கூடியது எது?

(1) பூசணி (2) புடோல் (3) பீற்றூட்

14. இலங்கையின் தேசிய மரம் எது?

(1) வெள்ளரசு (2) நாவல்மரம் (3) நாகமரம்

15. 

உருவில் காட்டப்பட்டுள்ளது போன்று அலுமினியக் கரண்டியில் சிறிதளவு நீரை இட்டு அதனை எரியும் மெழுகுதிரிச் சுவாலையில் பிடிக்கும்போது அவதானிக்கக்கூடிய நிகழ்வு அல்லாதது.

(1) கரண்டியிலுள்ள நீர் சூடாகும். (2) நீர் நீராவியாக மாறும்.
(3) நீரின் நிறம் மாற்றமடையும்.

16. பின்வரும் இசைக்கருவிகளுள் காற்றின்மூலம் இசையெழுப்புவது எது?

(1) வீணை (2) தபேலா (3) நாதஸ்வரம்

17. கிரிக்கட் விளையாட்டின்போது ஓர் அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?

(1) ஏழு (2) ஆறு (3) பதினொன்று

18. 

இக்குறியீட்டின் மூலம் காட்டப்படுவது.

(1) கட்டாய சுற்றுவளைவு (2) மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது
(3) திரும்பவும் பயன்படுத்தலாகாது

19. பின்வருவனவற்றுள் சமூகவிரோதச் செயற்பாடாக அமைவது எது?

(1) சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புதல் (2) வேலைதேடித் திரிதல்
(3) போதைப்பொருள் பாவனை

20. அபயகிரி விகாரை எம்மன்னனால் அமைக்கப்பட்டது?

(1) வலகம்பா மன்னன் (2) தாதுசேன மன்னன்
(3) மகாசேன மன்னன்

21. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு எது?

(1) 1948 (2) 1815 (3) 1972

22. கூடிய மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் எது?
(1) வட மாகாணம் (2) மத்திய மாகாணம் (3) மேல் மாகாணம்

23. பின்வரும் தாவரங்களுள் பூக்காத தாவரம் எது?
(1) தென்னை (2) பன்னம் (3) நாவல்

24. தரைத்தோற்ற வேறுபாடுகளைக் காட்டும்போது புகையிரத வீதியைக் காட்டுவதற்குப் பயன் படுத்தப்படும் நிறம் எது?
(1) சிவப்பு (2) கறுப்பு (3) மஞ்சள்

25. மக்கள் மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்ப்பதற்காக அரும்பாடுபட்டவர் யார்?
(1) வண.எஸ்.மஹிந்த (2) C.W.W.கன்னங்கரா (3) ஆதர்.சி.கிளார்க்

26. நீரைச் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படுவது எது?
(1) குளோரின் (2) அயடின் (3) கொண்டிஸ்

27. பின்வருவனவற்றுள் மீன்பிடித் தொழில் செய்வோர் பயன்படுத்தும் உபகரணம் எது?
(1) கரப்பு (2) பட்டடை (3) செக்கு

28. வானவில்லில் உள்ள நிறங்களின் எண்ணிக்கை யாது?
(1) ஏழு (2) எட்டு (3) ஒன்பது

29. புரதச்சத்து அதிகளவில் அடங்கியுள்ள உணவு வகை
(1) மரவள்ளி (2) சோயாப்பால் (3) நிலக்கடலை

30. இலங்கையில் நாணயத் தாள்களை அச்சிட்டு வெளியிடும் நிறுவனம் எது?
(1) மக்கள் வங்கி (2) இலங்கை மத்திய வங்கி (3) இலங்கை வங்கி

**16.** காடுகள் விலங்குகளின் உறைவிடமாக அமைவதோடு மட்டுமல்லாது மனிதனுக்கும் மிக அவசியமான ஒன்றாக அமைகின்றன. ஆனால் பல காரணங்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு.

"**காடுகளைப் பாதுகாப்போம்**" தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

( ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். )

1. ................................................................................................................

................................................................................................................

2. ................................................................................................................

................................................................................................................

3. ................................................................................................................

................................................................................................................